# நிலக்கடலையில்
# அதிக மகசூல் பெற டி.எம்.வி. 13 இரகம் சாகுபடி செய்வீர்.




தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ள அக்கநாயக்கன்பட்டி கிராமத்தில் வாகைக்குளம் **ICAR-** வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலமாக 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிலக்கடலை இரகங்கள் மதிப்பிடுதல் பண்ணை ஆராய்ச்சித்திடல் அமைக்கப்பட்டது. இந்தப் பண்ணை ஆராய்ச்சித் திடலானது உழவியல் தொழில் நுட்ப வல்லுநர் திரு. ஆ. முருகன் அவர்களால் ஸ்காட் நிறுவனத் தலைவர் திருமிகு. கிளிட்டஸ் பாபு அவர்களின் வழி காட்டுதலின்படி நடத்தப்பட்டது. சென்ற ஆண்டு நிலக்கடலை சாகுபடியில் உள்ள பிரச்சனைகள் குறித்து விவசாயிகள் மற்றும் வல்லுநர்களால் கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் விவசாயிகள் தங்களது கிராமத்தில் புதிய இரகங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பூச்சி, நோய் தாக்காத அதிக மகசூல் தரக்கூடிய நிலக்கடலை பற்றிய விழிப்புணர்வு இல்லை எனக் கூறினார்கள். ஆகையால் இக்கிராமத்திற்கேற்ற அதிக மகசூல் தரக்கூடிய புதிய இரகங்களான கோ-6 மற்றும் டி.எம்.வி-13 இரகத்தினை தற்போது விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டு இருக்கும் டி.எம்.வி-7 இரகத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டது. விதை மற்றும் இடுபொருட்கள் இக்கிராமத்தில் தேர்வு செய்த ஏழு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் விவசாயிகளுக்கு வயல்வெளியில் நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்ப பயிற்சிகள் வழங்கி விவசாயிகள் தை பருவத்தில் இம்மூன்று இரகங்களும் விதைப்பு செய்தனர். இது தற்போது அறுவடை செய்யப்பட்டுள்ளது. மற்ற இரகங்களை விட டி.எம்.வி-13 இரகமானது அதிக கடலை எண்ணிக்கை (சராசரியாக செடி ஒன்றிற்கு 24 கடலைகள்) கொண்டதாகவும், பூச்சி, நோய் எதிர்ப்புத்திறன் மிக்க, அதிக மகசூல் **ஏக்கருக்கு 860 கிலோ (36 கிலோ X 24 மூடைகள்)** தரவல்லதாகவும், கோ-6 கடலை இரகத்தில் செடி ஒன்றிற்குச் சராசரியாக 18 கடலைகளும், டி.எம்.வி. 7 இரகத்தில் சராசரியாக செடி ஒன்றிற்கு 12 கடலைகளும் காணப்பட்டது. இதனட் மூலம் கோ-6 இரகத்தில் ஏக்கருக்கு 720 கிலோ (36 கிலோ X 20 மூடைகள்) டி.எம்.வி. 7 இரகத்தில் ஏக்கருக்கு 560 கிலோ (36 கிலோ X 15 மூடைகள்) மட்டுமே மகசூலாகக் கிடைத்தது. இக்கிராம விவசாயிகள் டி.எம்.வி. 13 இரகம், கோ-6-ஐ விட வயது (10 நாட்கள்) குறைந்ததாகவும், அதிக மகசூல் தரவல்லதாகவும், இலைப்புள்ளி நோய்கள் தாக்காததாகவும் உள்ளதாக கண்டறிந்து உள்ளனர். ஆகையால் வரக்கூடிய பருவங்களில் அக்கநாயக்கன்பட்டி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் டி.எம்.வி. 13 இரகம் சாகுபடி செய்து அதிக இலாபம் பெறலாம் என விவசாயிகள் கூறினார்கள்

